செ.வெ.எண்: 66 நாள்: 06.02.2018

ந.க.1581/2018/எம்.1
நாள்.05.02.2018

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

## பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டமானது விபத்துக்கள் அதிகமாக ஏற்படும் மாவட்டமாக அரசால் கருதப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்கையில் விபத்துக்களில் ஒரு பகுதி நெடுஞ்சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளால் ஏற்படுவதாக தெரியவருகிறது. கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளை சாலைகளில் சுற்றித்திரிய விடக்கூடாது என தொடர்ந்து வலியுறுத்தியும் இதனை கடைபிடிக்க முன்வருவதாக தெரியவில்லை. எனவே சாலை பாதுகாப்பினை கருத்தில் கொண்டு இனி வரும் காலங்களில் கால்நடைகளை சாலைகளில் விடப்பட்டால் கால்நடைகளை கைப்பற்றி பொதுஏலத்தில் விடப்படும் என்பதையும், மேலும் சம்மந்தப்பட்ட உரிமையாளர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கால்நடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

ஒம்/- பா.பொன்னையா,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.

//உத்தரவின்படி//
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
6/2/18